# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.139 /பேரூ/2023
நாள். 12.07.2023

திரு. S. மார்ட்டின் பெட்ரிக்,
கன்னியாகுமரி மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
பாகோடு முதல் நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், ஆலுவிளை, பாகோடு, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. S. மார்ட்டின் பெட்ரிக் என்பவரது 18.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.05.2023 அன்று பெறப்பட்டு, 139/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம், ஆலுவிளை, பாகோடு, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. S. மார்ட்டின் பெட்ரிக் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், பாகோடு கிராமம், சர்வே எண். 545/2ஏ–ல் திரு.பா.சந்தோஷ்குமார் த/பெ. பாஸ்கரன், ஆலுவிளை, பாகோடு அஞ்சல், என்பவருக்கு சொந்தமான 2.000 செண்ட் சொத்து உள்ளது. இச்சொத்தின் கிழக்கு எல்லையாக எங்களது வீடும், தெற்கு எல்லையாக திரு. சந்திரன் என்பவருக்கு சொந்தமான கட்டிடமும் மேற்கு எல்லையாக மார்த்தாண்டம் – பனச்சமூடு நெடுஞ்சாலையும், வடக்கு எல்லையாக ஆலுவிளை – சிதறால் நெடுஞ்சாலையும் உள்ளது.

மேற்குறிப்பிட்ட திரு. சந்தோஷ்குமார் என்பவர் தனக்கு சொந்தமான மேற்குறிப்பிட்ட சொத்தில் பாகோடு பேரூராட்சியின் அனுமதி பெறாமல், கட்டிட விதிகளுக்கு மாறாக கட்டிடம் கட்டும் பணியில் ஈடுபட்டார். கட்டுமானங்கள் அனுமதி இன்றியும், கட்டிட விதிகளுக்கு மாறாகவும், சாலையை ஆக்கிரமித்தும் சாலை போக்குவரத்திற்கு தடையாகவும் இருந்ததால் 16.12.2020 அன்று பாகோடு பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி

இயக்குநர், மேன்மை தங்கிய மாவட்ட ஆட்சியர் நாகர்கோவில் ஆகியோர்களுக்கு புகார் செய்தேன்.

நான் 16.12.2020 அன்று கொடுத்த புகார் மனுவிற்கு பாகோடு பேரூராட்சி செயல் அலுவலர் ந.க. எண் 227/2020/அ1/நாள் 30.12.2020–ல் திரு. சந்தோஷ்குமார் அவர்களுக்கு உரிய அனுமதி பெற்று, கட்டிட விதிகளின்படி கட்டிடம் கட்ட நோட்டீஸ் வழங்கியுள்ளதாக எனக்கு அறிவிப்பு கொடுத்தார்.

கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றதால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டதா, வழங்கப்பட்டிருந்தால், அதற்கான அனுமதி நகல்கள் வழங்க கேட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி 20.01.2021–ல் பாகோடு பேரூராட்சி பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்தேன்.

தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி தகவல் கேட்டு நான் கொடுத்த மனுவிற்கு ந.க.எண். 21/2021/அ1 நாள் 22.02.2021 தேதியிட்டு எனக்கு தகவல் வழங்கப்பட்டது. அந்த தகவலில் மேற்குறிப்பிட்ட திரு. சந்தோஷ்குமார் அவர்களுக்கு கட்டிட அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என்ற தகவல் வழங்கப்பட்டது. எனவே நான் பொது நலன் கருதி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அவர்கள், நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர், நாகர்கோவில், பாகோடு பேரூராட்சி செயல் அலுவலர் மேற்குறிப்பிட்ட திரு. சந்தோஷ்குமார் ஆகிய நால்வரை எதிர்மனுதார்களாகவும் நான் மனுதாராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் சட்ட விரோதமான கட்டுமானங்களை அகற்ற W.P.(MD) No. 8672/2021 மற்றும் WMP (MD)No.6543/2021 தாக்கல் செய்தேன். இந்த ரிட் மனுவானது அரசு தரப்பு வாதத்தின் அடிப்படையில் 12.01.2021ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டதாக குறிப்பிட்டதால் முடித்து வைக்கப்பட்டது. மேலும் விதி மீறல் இருந்தால் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவிப்பு வழங்கவும் ஆணையிடப்பட்டது.

பாகோடு பேரூராட்சி பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மேல்குறிப்பிட்ட கட்டிட கட்டுமானம் தொடர்பாக நான் 20.01.2021 தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி கேட்ட தகவலுக்கு ந.க. எண் 21/2021/அ1 நாள் 22.02.2021 தகவலில் திரு. சந்தோஷ்குமார் அவர்களுக்கு கட்டிட அனுமதி வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார். அதே பேரூராட்சி செயல் அலுவலர் நான் மனுதாரராக ஆக தாக்கல் செய்த ரிட் மனுவில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்களுக்கு பதில் உரைக்காக வழங்கப்பட்டுள்ள கடிதம் ந.கஎண். 03/2021/அ1 நாள் 25.04.2021–ல் திரு. சந்தோஷ்குமார் அவர்களுக்கு இப்பேரூராட்சி கட்டிட அனுமதி எண் 99/2020–2021 நாள் 12.01.2021ன்படி கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று முரண்பட்ட கடிதத்தை முறையாக வழங்கியுள்ளார். மேலும் அக்கடிதத்தில் மார்த்தாண்டம் பனச்சமூடு சாலையிலிருந்து 1.50 மீட்டர் ஆலுவிளை வெலிக்கல் சிறிய நெடுஞ்சாலையிலிருந்து 1.00 மீட்டர் இடைவெளியும் விட்டு அஸ்திவாரப்பணி செய்யப்பட்ட பின்னர் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். பாகோடு முதல்நிலைப் பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிடுவது போல் சாலைப்பகுதியிலிருந்து இடைவெளி எதுவும் விடப்படவில்லை. செயல் அலுவலரின் கட்டிட அனுமதி நடவடிக்கை 3வது நிபந்தனை பொதுப்பாதையிலிருந்து 3.00 மீட்டர் தூரத்தில் நிலையான கட்டிடம் ஏதும் கட்டக் கூடாது என உள்ளது. மேற்குறிப்பிட்ட கட்டிட கட்டுமானத்தில் அப்பட்டமான விதி மீறல் உள்ளது, இதற்கு பாகோடு பேரூராட்சி செயல் அலுவலர் ஆதரவும், ஒத்துழைப்பும்தான் காரணம். தனது சொந்த சுயநலனுக்காக கட்டிட அனுமதி வழங்கும் அதிகாரத்தை தவறுதலாகவும் முறைகேடாகவும் பயன்படுத்தி பொதுநலனுக்கு குந்தகம் விளைவித்துள்ளார்.

எனவே மேன்மைதங்கிய உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் உரிய விசாரணை செய்து, பாகோடு பேரூராட்சி செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க பணிந்து வேண்டுகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் பாகோடு பேரூராட்சி செயல் அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டது.

பாகோடு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 03.06.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

கன்னியாகுமரி மாவட்டம், பாகோடு முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட ஆலுவிளை சந்திப்பில் திரு. சந்தோஷ்குமார் என்பவர் தனக்கு சொந்தமான 'அ' கிராமம் புல எண் 545/2எ-ல் பாகோடு பேரூராட்சியின் அனுமதி பெறாமல் கட்டட விதிகளுக்கு மாறாக கட்டடம் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளதாவும், கட்டுமானங்கள் அனுமதியின்றியும் கட்டட விதிகளுக்கு மாறாகவும், சாலையை ஆக்கிரமித்தும் பணி மேற்கொள்ளப்படுவதாக 16.12.2020 அன்று பாகோடு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு திரு. மார்ட்டின் பெட்ரிக் என்பவர் புகார் மனு சமர்ப்பித்தார். புகாரின் அடிப்படையில் இவ்வலுவலக ந.க. எண். 227/2020/அ1 நாள் 30.12.2020-இன்படி திரு.சந்தோஷ்குமார் என்பவருக்கு உரிய அனுமதி பெற்று கட்டடம் கட்ட நோட்டீஸ் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் திரு. சந்தோஷ்குமார் என்பவர் ஏற்கனவே அதில் அமைந்திருந்த கட்டட எண். 13/1A எண்கொண்ட ஓட்டு கட்டத்தினை இடித்து, அதே இடத்தில் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் 51.92 சதுரமீட்டர் வீதம் வணிக கட்டடம் கட்டவும் இரண்டாம் தளத்தில் குடியிருப்பு கட்டடம் கட்டவும் அனுமதி வேண்டி வரைபடம் மற்றும் ஆவணங்களுடன் பேரூராட்சி அலுவலகத்தில் 08.01.2021-ல் விண்ணப்பம் சமர்ப்பித்தார். கட்டட அனுமதி விண்ணப்பத்தின் அடிப்படையில் தளஆய்வு மேற்கொள்ளப்பட்டு கட்டட அனுமதிக்கான கட்டணங்களை அரசுக்கு செலுத்த மனுதாரர் திரு. சந்தோஷ்குமார் என்பவருக்கு உரிய செல்லான் வழங்கப்பட்டு மனுதாரரால் தொகை உரிய தலைப்பில் அரசுக்கு செலுத்தப்பட்ட பின்னர் 12.01.2021 அன்று இவ்வலுவலக கட்டட அனுமதி எண் 99/2020-2021, நாள் 12.01.2021-இன் படி ஏற்கனவே அமைந்திருந்த ஓட்டு கட்டடத்தின் அதே இடத்தில் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. பின்பு 20.01.2021 அன்று திரு. மார்ட்டின் பெட்ரிக் என்பவரால் பாகோடு பேரூராட்சி அலுவலகத்திற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் பாகோடு 'அ' கிராமம் புல எண் 445/2எ-இல் திரு.சந்தோஷ்குமார் என்பவருக்கு கட்டடம் கட்டுவதற்கான கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்ற தகவல் கேட்டு தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு பெறப்பட்டது. ஆனால் திரு. சந்தோஷ்குமார் என்பவருக்கு இவ்வலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட கட்டட அனுமதி பாகோடு அ கிராமம் புல எண்.545/2எ ஆகும். ஆகவே திரு. மார்ட்டின் பெட்ரிக் என்பவரால் கோரப்பட்ட தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுவிற்கு பாகோடு அ கிராமம் புல எண் 445/2எ-இல் திரு.சந்தோஷ்குமார் என்பவருக்கு கட்டடம் கட்டுவதற்கான கட்டட அனுமதி வழங்கப்படவில்லை என தகவல் வழங்கப்பட்டது. இத்தகவலில் எவ்விதமான பொய்தன்மையும் இல்லை. மனுதாரர் கோரப்பட்டதற்கு மட்டுமே தகவல் வழங்கப்பட்டது. அதன்பின்னர் திரு. மார்ட்டின் பெட்ரிக் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP.No. 8672/2021-இல் எதிர்மனுதாரர்களாக 1) மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், (2) கண்காணிப்பு பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை, நாகர்கோவில் (3) செயல் அலுவலர், பாகோடு பேரூராட்சி, பாகோடு (4) சந்தோஷ்குமார் ஆலுவிளை பாகோடு அஞ்சல்

என்பவர்களை சேர்த்து கட்டட அனுமதி பெறாத கட்டடத்தினை இடித்து அப்புறப்படுத்த Writ மனு தாக்கல் செய்தார். மேற்படி Writ மனுவிற்கு பாகோடு பேரூராட்சி மூலம் திரு. சந்தோஷ்குமார் என்பவருக்கு வழங்கப்பட்ட கட்ட அனுமதியின் நகலுடன் எதிர் உறுதிஆவணம் தாக்கல் செய்யப்பட்டது. எதிர் உறுதி ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி Writ மனுவினை விசாரித்து 29.04.2021 அன்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் வழக்கு முடித்து வைக்கப்பட்டது. அவ்வழக்கின் தீர்ப்பில் மனுதாரர் Unauthorized Building என மனுவில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றும் உரிய கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் மனுதாரரின் கோரிக்கை ஏற்க இயலாதெனவும் கட்டடத்தில் விதிமீறல்கள் இருந்தால் அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டுவரலாம் எனவும் கூறி வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

மேலும் திரு. மார்ட்டின் பெட்ரிக் என்பவரால் நெடுஞ்சாலைத்துறைக்கு புகார் மனு அனுப்பப்பட்டு புகார் மனுவின் அடிப்படையில் நெடுஞ்சாலை துறை பணியாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர் மூலம் தலஆய்வு மேற்காள்ளப்பட்டது. நெடுஞ்சாலைத்துறை மூலம் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர் கட்டடம் கட்டப்பட்ட இடத்தில் எவ்விதமான கட்ட விதிமீறல்களும் உள்ளதென நாளதுவரை நெடுஞ்சாலை துறை மூலம் பேரூராட்சிக்கு அறிக்கையேதும் பெறப்படவில்லை. திரு சந்தோஷ்குமார் என்பவரால் கட்டப்பட்ட வணிக மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு வரி நிர்ணயம் செய்யப்பட்டு தற்போது குடியிருப்பு மற்றும் வணிக கட்டடங்கள் பயன்பாட்டில் உள்ளது. இக்கட்டடத்தின் மூலம் போக்குவரத்திற்கு இடையூறு என்றோ விபத்துக்கள் ஏற்பட்டதாகவோ நாளது வரை எவ்விதமான புகார்களும் பேரூராட்சியில் பெறப்படவில்லை. திரு. சந்தோஷ்குமார் மற்றும் திரு.மார்ட்டின் பெட்ரிக் என்பவர்களின் இடையில் உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக திரு. மார்ட்டின் பெட்ரிக் என்பவர் தொடர்ந்து புகார் தெரிவித்து வருகிறார். புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதி திரு.சந்தோஷ் குமார் என்பவருக்கு பத்திரப்பதிவு துறை ஆவணம் எண்.1134, நாள் 19.06.2003–இன்படி செல்வநாதன் என்பவர் (மார்ட்டின் பெட்ரிக் என்பவரின் தந்தை) நோய்வாய் காரணமாக மருத்துவமனையில் ஞாபகசத்தியற்று பேசமுடியாத நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது செல்வநாதனுக்கு வேண்டி க்யூரேட்டர் நிலையில் இருக்கும்போது அவரது மகன் திரு. மார்ட்டின் பெட்ரிக் என்பவரால் கிரயமாக கொடுக்கப்பட்ட பகுதியாகும். பின்னர் அப்பகுதியின் சொத்து மதிப்பேற்றம் உயர்வு பெற்ற பின்னர் திரு. சந்தோஷ் குமார் என்பவரிடமிருந்து திரு. மார்ட்டின் பெட்டிரிக் என்பவர் திரும்ப கிரயம் கேட்கப்பட்டு திரு. சந்தோஷ்குமார் என்பவர் வழங்கப்படாத காரணத்தாலும் அப்பகுதியில் புதியதாக நிரந்தரமான கான்கிரீட் கட்டடம் திரு. சந்தோஷ்குமார் என்பவரால் மேற்கொள்ளப்பட்டதாலும் இவ்விதமான புகார்கள் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகிறது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

4) இம்முறைமன்ற 22.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 27.06.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5) 27.06.2023 அன்று நாகர்கோவில் முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

"கன்னியாகுமரி மாவட்டம் பாகோடு முதல்நிலை பேரூராட்சி ஆலுவிளை சந்திப்பில் திரு சந்தோஷ்குமார் என்பவர் பேரூராட்சியின் அனுமதியின்றி வணிக கட்டடம் கட்டியுள்ளார். சுற்றுலா இடமான மேற்கண்ட இடத்தில் கட்டட விதிகளுக்கு மாறாகவும் நடைபாதையை ஆக்கிரமித்தும் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கடையால் சுற்றுலா வருபவர்களுக்கு இடையூறு

ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக பாகோடு பேரூராட்சிக்கு 2020–லிருந்து புகார் மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளது. எனது புகார்களுக்குப் பின்னர் 12.1.2021ல் மேற்கண்ட கட்டடத்திற்கு கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தின் மீது உடனடி நடவடிக்கை எடுக்காத பேரூராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டு கொள்கிறேன்.

மேலும் எனது 18.5.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

6) பாகோடு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 27.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் பாகோடு பேரூராட்சிக்குட்பட்ட ஆலுவிளை சந்திப்பில் திரு. சந்தோஷ்குமார் என்பவர் கட்டியுள்ள கட்டடத்திற்கு உரிய கட்டட அனுமதி பெறவில்லை என மனுதாரரிடமிருந்து 2020ல் புகார் பெறப்பட்ட நிலையில்,30.12.2020 அன்று உரிய அனுமதி பெற்று கட்டடம் கட்ட நோட்டீஸ் அனுப்பப்பட்டது என்கின்ற விவரத்தையும் மேலும் மேற்கண்ட திரு. சந்தோஷ்குமார் என்பவருக்கு 12.1.2021ல் கட்டட அனுமதி வழங்கப்பட்டது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் பாகோடு முதல் நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தமது 18.5.2023 நாளிட்ட மனுவில் விளவங்கோடு வட்டம், பாகோடு கிராமம், சர்வே எண் 545/2ஏ –ல் திரு. சந்தோஷ்குமார் என்பவர் பேரூராட்சியின் அனுமதி பெறாமல், கட்டிட விதிகளுக்கு மாறாக கட்டிடம் கட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறார் என மனுவில் தெரிவித்துள்ளார்.

பாகோடு பேரூராட்சி செயல் அலுவலர் தமது 30.12.2020 நாளிட்ட கடிதத்தில் உரிய அனுமதி பெற்று கட்டிடவிதிகளின்படி கட்டிடம் கட்ட அறிவுறுத்தி திரு. சந்தோஷ்குமார் என்பவருக்கு அறிவிப்பு வழங்கியுள்ளதாகவும் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்டும் மேலும் பாகோடு செயல் அலுவலர் தமது 22.2.2021 நாளிட்ட கடிதத்தில் மேற்படி நபருக்கு கட்டிட அனுமதி வழங்கப்படவில்லையென தகவல் அளித்துள்ளார். அதனைத் தொடர்ந்து மனுதாரர் சட்டவிரோதமான கட்டுமானங்களை அகற்றக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் WP No.8672/2021 வழக்கு தொடர்ந்துள்ளார். கட்டிட அனுமதி பெற்றுதான் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது என குறிப்பிட்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் 29.04.2021 நாளிட்ட ஆணையில் வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் மனுதாரரால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கோரப்பட்ட தகவலானது சர்வே எண். 445/2எ எனவும் ஆனால் திரு.சந்தோஷ்குமார் என்பவருக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்ட சர்வே எண் 545/2எ எனவும் பாகோடு பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. எனவே இந்நேர்வில் கட்டிட அனுமதி பெற்றபின்னரே கட்டடம் கட்டப்பட்டு வருவது என்பது உறுதியாகிறது.

மேலும், மனுதாரால் கட்டுமான பணிகளில் விதிமீறல்கள் உள்ளதென நெடுஞ்சாலைத்துறைக்கு புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நெடுஞ்சாலைத் துறைப்

பணியாளர்களால் தலஆய்வு மேற்கொள்ளப்பட்டதென்றும், நெடுஞ்சாலைத்துறை மூலம் விதிமீறல்கள் உள்ளதென அறிக்கையேதும் இதுவரை பெறப்படவில்லையென்றும், வணிக வளாகம், குடியிருப்பு கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, வரிநிர்ணயம் செய்யப்பட்டு தற்போது குடியிருப்பு, வணிக வளாகங்கள், பயன்பாட்டில் உள்ளதெனவும் பாகோடு செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது. எனவே மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு புகார் அளிக்கும்போது உரிய ஆதாரங்களோடு புகார் அளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார். போதிய ஆதார ஆவணங்களின்றி மனுதாரர்கள் பொத்தாம் பொதுவாக புகார் மனுக்கள் அளிக்கும் பட்சத்தில் இம்முறைமன்றத்தின் நேரம் வீண்டிக்கப்படுவதாக இம்முறைமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர் இம்முறைமன்றத்தில் புகார் மனுக்கள் அனுப்பும்போது அதற்கான ஆதாரம் மற்றும் ஆவணங்களுடன் புகார் மனுக்களை அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

இந்நிலையில் பாகோடு முதல்நிலைப் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்து வைக்கலாமென இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, ஜுலை – 12 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்./–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S. மார்ட்டின் பெட்ரிக்,
ஆலுவிளை, பாகோடு,
கன்னியாகுமரி மாவட்டம்

2) செயல் அலுவலர்,
பாகோடு முதல் நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர்
(Nodal Officer)(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

13/7/23

செயலாளர் (முகூபொ)

13.7.2023